## ஒட்டன்சத்திரம்நகராட்சி

<u>நகர்மன்றத்தின் அவசரக் கூட்டமானது 24.07.2024 (புதன் கிழமை) அன்று முற்பகல் 10.30 மணியளவில்</u>

<u>நகராட்சிநகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டம்</u>

| பொருள் எண் | மன்ற பொருள் | கூட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | அரசாணை (4D) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும்குடிநீர் வழங்கல் துறை, நாள்.01.12.2022-ன்படி, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2022-23-ன் கீழ் ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட் வளாக கடைகள் மற்றும் இதர இனங்கள் கட்டிடப் பணிகள் மேற்கொள்ள ( KNMT பங்கு தொகை ரூ..1063.00 மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.1062.00 இலட்சம்) என மொத்த மதிப்பீடு தொகை ரூ.2125.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவின்படி, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, 23.12.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 05.01.2023-ல் வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ஒப்பந்ததாரருக்கு திட்டநிதி போக நகராட்சியின் பங்களிப்பு தொகை மூலம் பட்டியல் தொகை விடுவிக்கப்பட வேண்டியுள்ளது. பணியினை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியதன் அவசியம் கருதி, காந்திமார்க்கெட் கடைகள் மற்றும் இதர இனங்களுக்கு 22.12.2023, 19.01.2024, 08.02.2024 மற்றும் 21.02.2024 ஆகிய தேதிகளில் முன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தி மக்கள் தொடர்புதுறை, சென்னை மூலம் மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ்களிலும் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் பிளக்ஸ் பேனர்கள் மூலம் விளம்பர வெளியீடு செய்யப்பட்டது. மேற்படி தேதிகளில் மறுமுன்பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளியிலும் எவரும் கலந்துகொள்ளவில்லை.<br>இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.4302/ஆர்2/2024, நாள்.23.02.2024-ல், மேற்படி வளாகத்தில் கட்டப்படும் கடைகள் மற்றும் அலுவலக அறைகளுக்கான மாத வாடகை தொகை மற்றும் அலுவலக அறைகளுக்கான வைப்புத் தொகையினை மறுநிர்ணயம் செய்து உத்தரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து, இந்நகர்மன்ற தீர்மான எண்.53, நாள்.23.02.2024-ன் ஒப்புதலின்படி, மேற்படி இனங்களுக்கு 5-வது அழைப்பாக 01.03.2024-ம் மறுமுன்பொதுஏலம் / நேரடி மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் நேரடி மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் முன்மறுபொது ஏலத்தில் மேற்படி கடைகளில், Zone –A –ல் கடை எண்.7, Zone –A –ல் கடை எண்.14, Zone –A-1 –ல் அலுவலக அறை எண்.16, Zone –B –ல் கடை எண்.13, Zone – B –ல் கடை எண்.14, Zone – B –ல் கடை எண்.22, Zone – B-1 –ல் அலுவலக அறை எண்.13 மற்றும் Zone – C –ல் கடை எண்.3 ஆகிய இனங்களுக்கு மாத வாடகை உட்சபட்சமாக கோரியுள்ள ஏலதாரர்களின் முன்ஏலத் தொகையினை இந்நகர்மன்ற தீர்மான எண்.129, நாள்.08.03.2024-ல் | <u>**தீர்மான எண்.191**</u><br>ஒட்டன்சத்திரம் நகராட்சியில் புதியதாக கட்டப்பட்டு வரும் காந்தி மார்க்கெட் வணிக வளாகத்தில் உள்ள கடைகள் மற்றும் அலுவலக அறைகள் மற்றும் இதர இனங்களுக்குபலமுறை மறுமுன்பொதுஏலம்/ நேரடி மற்றும மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 8 கடைகள் (Zone –A –ல் கடை எண்கள். 7, 14, Zone –A-1 –ல் அலுவலக அறை எண்.16, Zone –B-ல் கடை எண்கள். 13, 14, 22, Zone – B-1 –ல் அலுவலக அறை எண்.13 மற்றும் Zone– C-ல் கடை எண்.3) தவிர்த்து மற்ற கடைகளுக்கு எவரும் கலந்துகொள்ள முன்வரவில்லை.<br>தற்போது காந்தி மார்க்கெட் கட்டிட பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளதாலும், மேற்படி கட்டிட பணிக்கு ஒப்பந்த தொகையில் நகராட்சி பங்கு தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட வேண்டியுள்ளதாலும், இந்நகராட்சியின் பொதுநிதியினை மேம்படுத்த வேண்டிய அவசியம் உள்ளதாலும் மற்றும் உள்ளூர், வெளியூர் வியாபாரிகள், காமராஜர் காய்கனி மார்க்கெட் கடை உரிமையாளர்கள், வியாபாரிகள் நலச்சங்கங்களால் அளிக்கப்பட்டுள்ள மனுக்களை பரிசீலனை |

| | | |
|---|---|---|
| | உறுதி செய்து நிபந்தனைகளுக்குட்பட்டு உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டது. அதன்படி மேற்படி 8 கடைகள் மட்டும் உயர்ந்தபட்ச ஏலதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. மேலும், மேற்படி இனங்களுக்கு 01.03.2024-ல் மறுமுன்பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், Zone-B-ல் கடை எண்.1 இனத்திற்கு தலா ஒரு நபர் மட்டுமே முன்வைப்புத் தொகை செலுத்தி முன்பொதுஏலத்தில் கலந்துகொண்டார். ஒருவர் மட்டும் முன்பொதுஏலத்தில் கலந்துகொண்டதால், Zone –B-ல் கடை எண்.1-க்கு திரு.மு.ஏசுராஜ் என்பவர் ரூ.11,000/-க்கும் மாத வாடகை செலுத்த சம்மதம் தெரிவித்து கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்காணும் இனங்களுக்கு மறுமுன்பொதுஏலம்/ நேரடி மற்றும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோர மேற்படி நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டதன்படி, மொத்த கடைகள் மற்றும் குத்தகை இனங்களில் அனுமதிக்கப்பட்ட 8 கடைகள் தவிர்த்து மீதமுள்ள கடைகள், அலுவலக கடைகள் மற்றும் குத்தகை இனங்களுக்கு 15.03.2024, 05.07.2024, 12.07.2024 மற்றும் 19.07.2024 ஆகிய தேதிகளில் மறுமுன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில், முன்பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகளில் எவரும் கலந்துகொள்ள முன்வரவில்லை.<br>மேலும், இந்நகராட்சி காந்தி மார்க்கெட் வளாக கடைகள் மற்றும் இதர இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்வதற்கான வைப்புத் தொகை கூடுதலாக உள்ளதையும் மற்றும் வாடகை தொகை கூடுதலாக உள்ளதையும், குறைத்து நிர்ணயம் செய்யும் பட்சத்தில், பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள விருப்பமுள்ளதாக இந்நகராட்சி பகுதியில் உள்ள வியாபாரிகள், காமராஜர் காய்கனி மார்க்கெட் கடை உரிமையாளர்கள், வியாபாரிகள் நலச்சங்கங்கள் மற்றும் முன்பு கடைகள் நடத்தி வந்த காந்தி மார்க்கெட் குத்தகைதாரர்கள் கோரிக்கைகள் வைத்த வண்ணம் உள்ளனர். மேலும், நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களும் இப்பொருள் தொடர்பாக மறுபரிசீலனை செய்திடக் கோரி கடிதம் அளித்துள்ளர்கள். எனவே, காந்தி மார்க்கெட் வளாக கடைகள் கட்டிட பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளதால், நகராட்சியின் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், பொதுநிதியினை மேம்படுத்தவும், மேலும் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள், காமராஜர் காய்கனி மார்க்கெட் கடை உரிமையாளர்கள், வியாபாரிகள் நலச்சங்கங்கள் மற்றும் ஏற்கனவே கடைகள் நடத்தி வந்த காந்தி மார்க்கெட் குத்தகைதாரர்களின் கோரிக்கையான வைப்புத் தொகை மற்றும் வாடகை தொகைகளை பரிசீலித்து மறுநிர்ணயம் செய்து காந்தி மார்க்கெட் கடைகள் மற்றும் குத்தகை இனங்களை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023-ன்படி, மறுமுன்பொதுஏலம்/ முன்ஒப்பந்தப்புள்ளி கோர உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம். | செய்தும், தற்போது காந்தி மார்க்கெட் கடைகளுக்கு வைப்புத் தொகைகளையும் மற்றும் மாத வாடகையையும் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து முன்பொதுஏலம்/ முன்ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.<br>1. Zone - A, B, C, D-ல் உள்ள தரை தள கடைகளுக்கு வைப்பு தொகை ரூ.4,00,000/-க்கு பதிலாக ரூ.2,00,000/- ஆக குறைத்தும், மாத வாடகை தொகை ரூ.10,800/-க்கு பதிலாக ரூ.7,500/- ஆக குறைத்து மன்றம் தீர்மானிக்கப்பட்டது.<br>2. Zone – A-1, B-1, C-1-ல் உள்ள மேல் தள அலுவலக கடைகளுக்கு வைப்பு தொகை ரூ.1,25,000/-க்கு பதிலாக ரூ.1,00,000/- ஆக குறைத்தும், மாத வாடகை தொகை ரூ.4,500/- ஆக நிர்ணயம் செய்து மறுமுன்பொதுஏலம்/ ஒப்பந்துபுள்ளி கோரிட தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கப்பட்டது.<br>3. Zone–B–ல் கடை எண்.1-க்கு திரு.மு.ஏசுராஜ் என்பவர் மட்டும் முன்பொதுஏலத்தில் கலந்துகொண்டு ரூ.11,000/-க்கும் மாத வாடகை செலுத்த சம்மதம் தெரிவித்து கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதன் படி, அன்னாருக்கு மேற்படி கடையினை மேற்கண்ட வாடகைக்கு ஒதுக்கீடுசெய்திட மன்றம் தீர்மானிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 2 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 12-வது வார்டு வீரசின்னம்மாள் கோவில் அருகில் மற்றும் 18-வது வார்டு திடீர் நகர் பகுதியில் ஜி.ஐ பைப்லைன் உடைப்பு ஏற்பட்டுள்ளது மற்றும் 15-வது வார்டு எருமைக்கரடு பகுதியில் குடிநீர் பிரதான பி.வி.சி பைப்லைன் குழாய்கள் உடைப்பு ஏற்பட்டுள்ளதால், மேற்படி பகுதிகளில் குடிநீர் வீணாவதாலும், போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதாலும், பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பகுதியில் உள்ள குடிநீர் பிரதான பைப்லைன்களை மாற்றியமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.192</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 3 | ஒட்டன்சத்திரம் நகராட்சி 12-வது வார்டு சம்சுதீன் காலனி பகுதியில் சிறுபாலம் சேதமடைந்துள்ளது மற்றும் 17-வது வார்டு நாகம்மாள் கோவில் அருகில் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் சிதலமடைந்துள்ளதால் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பயன்படுத்த இயலாமல் சிரமப்பட்டு வருகின்றனர். மேற்படி பகுதியில் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.193</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 4 | ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 202 3-2024-ஆம் ஆண்டிற்கான கணக்குகள் கணினி மூலம் பதிவேடுகளை வைத்து வரவு செலவு கணக்குகள் தயார் செய்ய வேண்டியுள்ளது. ஆண்டு கணக்குகள் முடிப்பதற்கு, தனியார் பட்டயக் கணக்கர் மூலம் கணினியில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு வழங்குவதற்கு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் தொகை ரூ.85,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>2023-2024-ஆம் ஆண்டு கணக்குகள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால், பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி ஆண்டு கணக்குகள் முடித்து தணிக்கைக்கு வழங்கவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்.194</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |
| 5 | ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான நிலசீரமைப்பு இயந்திர வாகனம் (Back hoe Loader) TN 94 X 1903 சுமார் 510 மணிநேரம் பயன்பாடு முடித்துள்ளதால், மேற்படி இயந்திர வாகனத்தை ஆயில் சர்வீஸ் செய்ய வேண்டியுள்ளது. JCB நிறுவனத்திடம் வாகனம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், பணியின் அவசர அவசியம் கருதி, திரு.எம்.முத்துக்கண்ணன், ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டமைக்காக வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.10,824/-ஐ ஒப்பந்ததாரருக்கு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு. | **<u>தீர்மான எண்.195</u>**<br>அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>6</td><td>ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் எண்.TN 57 AW 2867 வாகனத்தில் உள்ள டைனமோ பழுதடைந்து வாகனத்தை இயக்க இயலாத நிலை ஏற்பட்டதை தொடர்ந்து, மேற்படி ஈப்பு வாகனத்தை ஸ்ரீ விநாயகா ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், ஒட்டன்சத்திரம் பணியின் அவசர அவசியம் கருதி, பழுது பணி மேற்கொள்ளப்பட்டமைக்காக வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.4,150/-ஐ மட்டும் மேற்காணும் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.வி.சரவணன் என்பவருக்கு வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td><u>தீர்மான எண்.196</u><br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7</td><td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 6-வது வார்டு பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை பின்புறம் ஒருங்கிணைந்த முறையில் மலக்கசடு மற்றும் பயன்படுத்திய கழிவுநீரை சுத்திகரிப்பு செய்ய கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆலோசனைக் கட்டணம் மற்றும் ஆவணங்கள் கட்டணங்கள் வழங்க கேட்டு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.35,000/-ஐ மட்டும் M/s.Clear Tech Environmental Solution, Erode நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td><u>தீர்மான எண்.197</u><br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>8</td><td>ஒட்டன்சத்திரம் நகராட்சி வாரச்சந்தையில் உள்ள மேடு பள்ளங்களை சரிசெய்து கால்நடைகளை வாகனத்தில் ஏற்றவும் இறக்கவும் தேவையான மண் மேடுகள், பாதை அமைத்தல் பணிக்கு தொகை ரூ .2.40 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.178-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 04.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr><tr><td>1</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>0.24 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>2.16 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr></table>மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.24% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.24% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td><u>தீர்மான எண்.198</u><br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td>9</td>
<td>அரசாணை (4D)எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC)துறை, நாள்.01.12.2022-இல் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் ரூ.2125.00 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி மார்க்கெட்டில் கடைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி காந்தி மார்க்கெட் கடைகளுக்கு 05.07.2024-ம் தேதிக்கு மறுமுன்பொதுஏலம்/ முன்ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவில் வெளியீடு செய்ய செய்தி மக்கள் தொடர்பு துறை, திண்டுக்கல் வாயிலாக கோரப்பட்டதில் , 26.06.2024-ஆம் நாளைய தமிழ் தினசரி தினகரன் நாளிதழில் விளம்பரம் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 36,816/- மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண்.199</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள அனைத்து அறைகள் மற்றும் அலுவலக ஜெனரேட்டர் கேபிள் போன்றவைகளில் மின்சார பணிகளுக்கு தொகை ரூ.4.25 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.183-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 04.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>0.13 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>4.03 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.13% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.13% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 200</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>11</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள இணையதள UPS பழுதுகள் மற்றும் புதிய பேட்டரிகள் கொள்முதல் செய்து பொருத்தும் பணிகளுக்கு தொகை ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.184-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 04.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>2.39 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table></td>
<td><u>தீர்மான எண். 201</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி, மதிப்பீட்டு விலையில் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>12</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம், பொதுக் கழிப்பிடம் மற்றும் கட்டண கழிப்பிடங்களில் பழுது மற்றும் மராமத்து பணிகளுக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.185-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 04.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>0.14 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.பாலசுப்பிரமணியன்</td><td>2.04 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.14% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.14% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 202</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>13</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 10-வது வார்டு காந்தி மார்க்கெட் ஓடையில் கம்பிவேலி அமைக்கும் பணிக்கு தொகை ரூ .9.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 09.01.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.48-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 04.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஹச்.முகமது ரஸ்மி</td><td>0.12 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.செந்தில் கண்ணன்</td><td>1.13 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு.ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததாரரின் 0.12% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.12% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td><u>தீர்மான எண். 203</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>14</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 9 வார்டுகளில் உள்ள மினி பவர் பம்ப் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.176-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 05.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.கே.செந்தில்கண்ணன்</td><td>0.18 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>1.23 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.18% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.18% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 204</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>15</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 10 முதல் 18 வார்டுகளில் உள்ள மினி பவர் பம்ப் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.177-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 05.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.கே.செந்தில்கண்ணன்</td><td>0.16 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.முத்துக்கண்ணன்</td><td>1.27 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததாரரின் 0.16% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
<u>அலுவலக குறிப்பு:</u><br>
மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.16% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.கே.செந்தில்கண்ணன் ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 205</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>16</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 9 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தொகை ரூ .5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.179-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 05.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஹச்.முகமதுரஸ்மி</td><td>0.11 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.செந்தில்கண்ணன்</td><td>1.17 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table></td>
<td><u>தீர்மான எண். 206</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு.ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததாரரின் 0.11% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>17</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 10 முதல் 18 வார்டுகளில் உள்ள பகிர்மான குழாய்களில் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தொகை ரூ .5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.180-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 05.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ஹச்.முகமதுரஸ்மி</td><td>0.13 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.செந்தில்கண்ணன்</td><td>1.15 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு.ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததாரரின் 0.13% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.13% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஹச்.முகமதுரஸ்மி ஒப்பந்ததார ரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 207</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>18</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 முதல் 18 வார்டு பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக பணிக்கு தேவையான பகிர்மானக் குழாய் மற்றும் பம்பிங் மெயின் குழாய்களுக்கு உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு தொகை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள, 20.06.2024-இல் நகர்மன்ற தீர்மான எண்.182-ல், ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து , மேற்படி பணிக்காக 05.07.2024-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு,
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.பி.வேலுச்சாமி</td><td>0.21 % மதிப்பீட்டு விலையில் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஹச்.முகமதுரஸ்மி</td><td>2.07 % மதிப்பீட்டு விலையில் கூடுதல்</td></tr>
</table>
மேற்படி இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு திரு .பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் 0.21% மதிப்பீட்டு விலை விகிதத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>மேற்படி பணியின் அவசியம் கருதி , மதிப்பீட்டு விலையில் 0.21% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.வேலுச்சாமி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்தை ஏற்று, சப்ளை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 208</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>19</td>
<td>அரசாணை (4D)எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC)துறை, நாள்.01.12.2022-இல் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் ரூ.2125.00 இலட்சம் மதிப்பீட்டில் காந்தி மார்க்கெட் கடைகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்படி காந்தி மார்க்கெட் கடைகளுக்கு 05.07.2024-ம் தேதி முதல் வாரம் தோறும் வெள்ளிக்கிழமை தொடர்ந்து மறுமுன்பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுவருவதை பொதுமக்களுக்கு தெரியும் வண்ணம் நகராட்சி பகுதியில் பேனர்கள் அமைத்து நிறுவிக்கொடுக்க கீழகண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள்</th><th>விசுவல் இமேஜிங், ஒட்டன்சத்திரம் ரூ.</th><th>அம்மு ஆர்ட்ஸ், ஒட்டன்சத்திரம் ரூ.</th><th>பாலாஜி பிலக்ஸ், ஒட்டன்சத்திரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>காந்தி மார்க்கெட் கடைகள் முன்பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிளக்ஸ் பேனர்கள் தயார் செய்து நிறுவி கொடுத்தல் பணி<br>(பிளக்ஸ் 2-க்கு)</td><td>25000/-</td><td>26000/-</td><td>27500/-</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் விசுவல் இமேஜிங், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவு , மேற்படி நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 209</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>20</td>
<td>ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பயன்பாட்டில் உள்ள குடிநீர் டேங்கர் வாகனம் TN57 R4390 மூலம் நகராட்சி பகுதிகளில் விரிவாக்க பகுதிகளில் குடிநீர் டேங்கர் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் மேற்படி வாகனத்தின் பயன்பாடு அதிகம் உள்ளதாலும், பொதுமக்களின் நலன் கருதியும், வாகனத்தை வருடாந்திர பராமரிப்பு மற்றும் அதில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்திட திண்டுக்கல் TVS Mobility நிறுவனத்தின் பனிமனையில் வாகனத்தை பழுது நீக்கம் செய்திட செலவினப் பட்டியல் தொகை ரூ.1,42,630/-ஐ வாகன பழுது பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்படைத்தவுடன், மேற்படி நிறுவனத்தின் பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
மேற்கண்ட செலவினத்தினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மான எண். 210</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>21</td>
<td>பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான குழந்தைவேலப்பர் கோயில் மலைப்பாதையில் அனைத்து வசதிகளுடன் கூடிய கிரிவலப் பாதை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடு ரூ.864.00 இலட்சத்திற்கு, மூலதன மான்ய நிதி 2023-2024-ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.<br>
தற்போது மேற்படி திட்டப்பணியில் கிரிவலப் பாதையில் கூடுதலாக அடிப்படை மற்றும் பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடு ரூ.1200.00 இலட்சத்திற்கு, கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 202 4-2025-இன் கீழ் மேற்கொள்ள, நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2105/2024/P1, நாள்.29.05.2024-இன்படி, நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றதை தொடர்ந்து , மேற்படி பணிகளுக்கான (Concept Design & Drawing) கருத்துரு வடிவமைப்பினை தயார் செய்து வழங்க தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து , குழந்தைவேலப்பர் கோயில் கிரிவலப் பாதை அமைக்கும் பணிகளுடன் கூடுதலாக அடிப்படை மற்றும் பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளும் பணிகளுக்கான திட்ட மதிப்பீட்டு கருத்துரு வடிவமைப்பினை தயார் செய்ய (Consultant) தனியார் ஆலோசகர்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு</td>
<td><u>தீர்மான எண். 211</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பொருள்</th><th>Ayothy consultancy, Sivagiri (Estimate amt)</th><th>PSM Engineering & Construction , Chennai (Estimate amt)</th><th>SAMA Construction & Developmen ts, Chennai (Estimate amt)</th></tr>
<tr><td>1</td><td>Preparation of Detailed Project Report for Construction of Girivalapathai in Kuzhanthai Velappar Kovil approach road.</td><td>1.00% (Percentage)</td><td>1.20% (Percentage)</td><td>1.48% (Percentage)</td></tr>
</table>
வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் Ayothy consultancy, Sivagiri நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவு , மேற்படி நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளி மன்றத்தின் அனுமதிக்கு
<u>அலுவலக குறிப்பு</u>:
<ol>
<li>அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி , மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள Ayothy consultancy, Sivagiri நிறுவனத்தின் விலை விகிதத்தை ஏற்று பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
</tr>
<tr>
<td>22</td>
<td>
ஒட்டன்சத்திரம் நகராட்சி 1-வது வார்டு பகுதியில் அமைந்துள்ள பொன்னகரம் குளத்தினை தூர்வாரி குளத்தினை மேம்படுத்தும் பணிக்கு Amrut 2.0 திட்டத்தின் கீழ் மதிப்பீட்டு தொகை ரூ.41.00 இலட்சத்தில் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. தற்போது மேற்படி குளத்தின் கரையை பலப்படுத்த வேண்டியுள்தால் கூடுதலாக மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ .7.00 இலட்சம் நகர்மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>:-
மேற்கண்ட செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td><u>தீர்மான எண். 212</u><br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

(ஒம்)/-க.திருமலைசாமி,
நகர்மன்ற தலைவர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி